பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 11 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குவதையொட்டி இம்மாதம் 24-ஆம் தேதி அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
2. அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மத்திய அரசு உயர் முன்.னுரிமை அளித்து வருவதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்திலிருந்து சபரிமலை செல்லும் பக்தர்களின் வசதிக்காக **'swamy chat-bot'** எனும் வாட்ஸ்-அப் செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் வரும் 23-ஆம் தேதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள 16 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*------ இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இம்மாதம் 25-ஆம் தேதி தொடங்குகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் சுமூக நடைபெறுவது தொடர்பாக விவாதிக்க இம்மாதம் 24-ஆம் தேதி மத்திய அரசு அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது,

இக்கூட்டத்தொடர் அடுத்த மாதம் 20-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்.னுரிமை அளித்து வருவதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மண்வளம் குறித்த மாநாட்டில் காணொலி மூலம் பங்கேற்று உரையாற்றிய அவர், சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் முறை மற்றும் வேளாண் விளை பொருட்களுக்கான உரிய விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

விவசாயிகளிடையே மண்வளம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

அதிக அளவிலான ரசாயன உரங்களின் பயன்பாடு காரணமாக மண்வளம் பாதிக்கப்படுவதாக அமைச்சர் கவலை தெரிவித்தார்.

நாட்டின் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு சிவராஜ்சிங் சௌஹான் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நெடுஞ்சாலைகளின் இரு புறமும் வடிகால் வசதி செய்யப்பட வேண்டுமென்றும், சாலைகளின் தரம் குறித்து கண்காணிப்பு பொறியாளர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்றும் அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் தமது துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அவர், தமிழகத்தில் 16 ஆயிரத்து 202 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார்.

சாலை அமைக்கும் பணிகளில் குறைபாடுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

சாலைகளை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளை தாமதமின்றி விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் திரு ஏ வ வேலு வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

சுற்றுலாத்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் 38 தொழில் நிறுவனங்கள், உணவகங்கள், ட்டிராவல் நிறுவனங்கள், அரசுதுறை செயல்பாட்டாளர்களுக்கு சுற்றுலா விருதுகளை மாநில அமைச்சர்கள் திரு ராஜேந்திரன், திரு மா சுப்ரமணியன், திரு சேகர்பாபு ஆகியோர் இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜநேந்திரன், இத்துறையில் தமிழகம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்வதாகக் கூறினார்.

சுற்றுலாத்துறை வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் என்ற பொருளாதார இலக்கை அடைவதற்கான திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

மாநில அளவில் ஆண்டு மொத்த உற்பத்தியில் 12 சதவீதம் வரை சுற்றுலாத்துறை பங்களிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், இதன் மூலம் 25 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா மற்றும் அது சார்ந்த துணை தொழில்களில் ஈடுபட்டு வரும் மூன்று லட்சம் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும் என்று திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

உலகின் பல்வேறு மொழிகளில் உள்ள சிறந்த படைப்புகளை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதற்காக மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறந்த நூலகத்திற்கு டாக்டர் எஸ் ஆர் அரங்கநாதன் பெயரிலான விருதுகளை அவர் இன்று வழங்கி பேசினார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து நூலகத்திலும் வை-பை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - அன்பில் மகேஷ் ) ---- 48 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்திலிருந்து சபரிமலை செல்லும் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து தருவதற்காக **'swamy chat-bot'** எனும் வாட்ஸ்-அப் செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் தலைமை செயலாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், இந்த வசதி செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது,

24 மணி நேரமும் செயல்படும் இந்த செயலி மூலம் உதவிகளைப் பெற 6 2 3 8 0 0 8 0 0 0 – என்ற எண்ணிற்கு **Hi** என்ற குறுஞ்செய்தி அனுப்பி பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

காவல்துறை, தீயணைப்பு சேவைகள், மருத்துவ உதவிகள், வன அதிகாரிகள் மற்றும் உணவு பாதுகாப்புக்கான அவசர உதவி தொலைபேசி எண்களையும் இந்த செயலி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

சபரிமலை அருள்மிகு ஐயப்பன் கோவில் வழிபாடு மற்றும் பூஜைக்கான நேரங்கள், தங்கும் இடங்கள், உணவகங்கள், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டவை குறித்தும் இந்த செயலி மூலம் ஐயப்ப பக்தர்கள் எளிதில் அறிந்து கொள்ள முடியும் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கோவை மாவட்டத்தில் உள்ள ஆழியாறு அணையிலிருந்து பாசனத்துக்காக நாளை தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

135 நாட்களுக்கு திறந்துவிடப்படும் இந்த தண்ணீரின் மூலம் கோவை, பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை பகுதிகளில் உள்ள மொத்தம் 22 ஆயிரத்து 116 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனிடையே திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரில் உள்ள குடகனாறு அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளதை அடுத்து அணையிலிருந்து வினாடிக்கு 188 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் உள்ள ஒன்பதாயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் வரும் 23-ஆம் தேதி காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும் என்று அவர் கூறியுள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் தென்தமிழகம் மற்றும் வடதமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ----50 செகண்ட்*

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே அமைந்துள்ள சால்காம்ப் டெக்னாலாஜி நிறுவனத்தை மத்திய அரசின் நிதிக்குழுத் தலைவர் டாக்டர் அரவிந்த் பனகாரியா மற்றும் உறுப்பினர்கள் இன்று ஆய்வு செய்தனர்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் ஐந்து கோடியே 61 லட்சம் ரூபாய் மதிப்பிலான ஒன்பது புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

[]<<<>>>[]

விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் 40 லட்சம் ரூபாய் மதிப்பிலான நுரையீரல் மற்றும் இருதய ரத்த குழாய் அடைப்பை ஆரம்பத்திலேயே கண்டறியக்கூடிய புதிய அதிநவீன கருவிகளை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஆட்சியர் திரு ஜெயசீலன் தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

கரூர் அருகே உள்ள ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கம் அதன் முழு கொள்ளளவை எட்டியதை அடுத்து, உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் திருமதி உமா தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

சேலம் பள்ளப்பட்டி ஏரி பகுதியில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த வீடுகள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அகற்றப்பட்டன.

**[]<<<>>>[]**

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் ஆலயத்தில் பக்தர்கள் யானை அருகில் சென்று ஆசி பெறுவதற்கும், உணவு கொடுக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள 16 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன்ப்ரீத் கவுர் தலைமையிலான இந்திய அணியில், ஸ்மிருதி மந்தனா, ப்ரியா புனியா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், தேஜல், சைமா தாகூர், அருந்ததி ரெட்டி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான முதல் போட்டி ப்ரிஸ்பேனில் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சிலியில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் **Prarthana Thombare –** அமெரிக்காவின் **Robin Anderson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

***End of News***